# குழந்தைகளுக்கு காய்ச்சல்



உடல் வெப்பநிலை 38°Cக்கு மேல் இருக்கும் பட்சத்தில் நாம் காய்ச்சல் என கூறுகின்றோம்.

## காய்ச்சல் என்றால் என்ன ? அதன் அபாயங்கள் என்ன ?

காய்ச்சல் என்பது:

– பயனுள்ளது, இது நோய்த்தொற்றுகளுக்கு எதிராக போராட உதவும் உடலின் இயல்பான செயல்பாடு ஆகும்.

– அடிக்கடி ஏற்படும், தடிமல் போன்ற சாதாரண நோய்களின் போது இந்நிலை இருக்கும்.

– பாரதூரமானது அல்ல, இது ஒரு நோயின் தனி அறிகுறியாக இருப்பது அரிது.

பெரும்பாலான சந்தர்பங்களில், மருந்து கொடுக்க வேண்டிய அவசியமின்றி அது மறைந்துவிடும்.

## உங்கள் குழந்தையின் வெப்பநிலையை எவ்வாறு அளவிடுவது?

வெப்பநிலையை அளவிடுவதற்கு பல முறைகள் உள்ளன, ஒவ்வொன்றிலும் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. எனவே, உங்கள் குழந்தையின் வயது மற்றும் ஏற்பட்டிருக்கும் நோய்க்கு ஏற்ப எந்த முறை மிகவும் பொருத்தமானது என்பதை தீர்மானிக்கவும். குழந்தையை காயப்படுத்தும் அபாயத்தை தவிர்க்க மலவாசல் வழியால் வெப்பநிலையை எடுக்க தற்பொழுது பரிந்துரைக்கப்படவில்லை.

## காய்சலுக்கு எப்போது சிகிச்சை அளிக்க வேண்டும்?

உங்கள் குழந்தையின் பொதுவான நிலையை மதிப்பிடுவது முக்கியம், இவை சிகிச்சை மற்றும் மருத்துவரை நாடும் வேகத்தை தீர்மானிக்கின்றன :

- எரிச்சல் நிலை
- இடைவிடாத அழுகை
- செயல்பாடு மற்றும் / அல்லது விழிப்புணர்வு குறைதல்
- பசியின்மை
- உதாரணத்திற்கு தூக்கக்கோளாறுகள்

| வயது | உடல் வெப்பநிலை பார்க்கும் விதம் | நன்மைகள் | தீமைகள் | செயல் முறை |
|---|---|---|---|---|
| 4 கிழமைகளுக்கு உட்பட்ட | கமக்கட்டு | விரைவானது, காயப்படும் அபாயம் இல்லை | வெப்பமானியின் நம்பகதன்மையை கவனிக்கவும் | நன்கு உலர்வான சருமத்தில் வைத்தவாறு வெப்பமானி இருக்க வேண்டும் |
| 4 கிழமைகளுக்கு மேற்பட்ட | கமக்கட்டு மற்றும் காதினுள் | விரைவானது, நம்பத்தக்கது | காதின் வழியாக வெப்பநிலையை பார்ப்பதற்கு காதின்வழி சுத்தமாக இருக்க வேண்டும் | காதுவழி சரியான முறையில் விரிவதற்கு காதை பின் நோக்கி இழுக்க வேண்டும் |





## 3 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு

பிறந்து முதல் 3 மாதங்களில் ஏற்படும் எந்தவொரு காய்ச்சல் நிலையும் குழந்தை மருத்துவரிடம் தெரிவிக்கப்பட வேண்டும். குழந்தைக்கு உடல்நிலை நன்றாக இருப்பது போல் தென்பட்டாலும், மருத்துவ ஆலோசனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.



# 3 மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு

**38°C** க்கு மேற்பட்ட உடல் வெப்பநிலை

– குழந்தையின் ஆடைகளை அகற்றவும்

– குடிப்பதற்கு கொடுக்கவும்

– அறையை அதிக வெப்பமாக்க வேண்டாம் (18/20°C)

– 30 நிமிடங்கள் காத்திருங்கள், பின்னர் :

- பொதுநிலை நன்றாக இருந்து **39.0°C** க்கு குறைவான வெப்பநிலை → **கண்காணிக்கவும், எந்த முன்னேற்றமும் இல்லை என்றால் குழந்தை மருத்துவரை நாடவும்**
- பொதுநிலை நன்றாக இல்லாமல் மற்றும் / அல்லது **39.0°C** க்கு அல்லது அதற்கும் அதிகமான வெப்பநிலை → உங்கள் குழந்தை மருத்துவரால் பரிந்துரைக்கப்படும், குழந்தையின் வயதிற்கு ஏற்ற காய்ச்சலுக்கான மருந்தைக் கொடுங்கள் → **கண்காணிக்கவும், குழந்தையின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றால் மருத்துவ ஆலோசனையை நாடுங்கள்.**

## முக்கியமானது

உங்கள் குழந்தைக்கு வருத்தம் எனில், இங்கு அழைக்கவும் :

1. உங்கள் குழந்தை மருத்துவர்
2. மருத்துவர்கள் மத்திய மையம் : 0848 133 133
3. உயிர் ஆபத்து அல்லது அவசரநிலை ஏற்பட்டால்: 144

canton de vaud

LIBERTÉ ET PATRIE



Programme cantonal de promotion de la santé et
de prévention primaire enfants (0-4 ans) - parents

AIDE ET SOINS À DOMICILE

CHUV

HEL

Section VD Ne Ju
Fédération Suisse de Sages-femmes

GPV
Groupement des Pédiatres Vaudois